**கவனிக்க.-** *13.07.2018 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *மற்றும் பகுதி* IV *(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2081 - 2018 ජූලි මස 20 වැනි සිකුරාදා - 2018.07.20

*2081 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1030 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1037 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) *அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் சட்டமூலம் 2018, யூலை 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *மக்கள் வங்கி (திருத்தம்) சட்டமூலம் 2018, யூலை 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2018, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1029 - B81432 - 5,403 (2018/ 07)

# பதவிகள் - வெற்றிடம்

## அக்மீமன பிரதேச சபை

01. தென் மாகாண அரச சேவையில் அக்மீமன பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள கீழ் வரும் பதவிகளுக்கு உரிய தகுதிகள் பூர்த்தி செய்திருக்கும் தென் மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளர்கள் ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்படுகின்றன.

| 02. பதவியின் பெயர் | பதவி வெற்றிடம் | சம்பள அளவு | குறைந்தபட்ச கல்வித் தகைமை |
|---|---|---|---|
| தகன அறை உதவியாளர் | 01 | PL 1-2016<br>24,250-250X10 - 270 X 10- 300 X 10 - 330X 12 - ரூபா. 36,410 | க. பொ. த (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் |
| நூலக உதவியாளர் | 02 | PL 1-2016<br>24,250-250X10 - 270 X 10- 300 X 10 - 330X 12 - ரூபா. 36,410 | க. பொ. த (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் |

**03. தேவையான வேறு தகைமைகள்:**

1. விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (தற்போது அரச சேவையில் நிரந்தர சேவையில் கடமை புரியும் விண்ணப்பதாரருக்கு உச்ச வயதெல்லை பற்றிய பாதிப்பு ஏற்படாது இவர்கள் உரிய திணைக்கள உயர் அதிகாரி மூலம் தமது விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்)
2. விண்ணப்பதாரர் பாரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன் 03 வருட காலத்திற்குள் தென் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்
4. விண்ணப்பதாரர் நன்நடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்
5. தண்டனைக் குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது.
6. உரிய தொழிலில் பெற்றுக் கொண்ட அனுபவம் சம்பந்தமாக விஷேட கவனம் செலுத்தப்படும்.
7. விண்ணபதாரர்கள் உரிய பதவிக்கு முன் குறிப்பிட்டு இருக்கும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**04. பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனை :**

1. இந்த பதவி நிரந்தரமானது ஒய்வூதியமுடையது ஆட்சேர்க்கப்படும் சேவையாளர்கள் விதவைகள் அநாதைகள் ஒய்வூதிய நிதியத்திற்கு உதவுத் தொகை ஒதுக்குதல் வேண்டும்.
2. அக்மீமன பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவாளர் மற்றும் மேற் குறிப்பிடப்பட்ட பதவிகளில் இந்த தாபனத்தில் தற்காலிக /அமைய /ஒப்பந்த அடிப்படையில் சேவை புரியும் விண்ணப்பதாருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
3. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 03 ஆண்டுகளுக்கு தகுதிகாண் காலத்துக்கு உட்படுவர்.

4. இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனை மற்றும் ஒழுங்கு விதிகளுக் கூடுதலாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிகளுக்கும் மற்றும் அரச திணைக்களத்தின் கட்டளைகளுக்கும், தென் மாகாண சபை, தென் மாகாண அரச ஆணைக்குழு மற்றும் அக்மீமன பிரதேச சபையால் அவ்வப்போது அமுல்படுத்தப்படும் கட்டளைகளுக்கும் முறன்பாடற்றவாறு செயற்படுவதற்கு சகல சேவையாளரும் உட்பட்டவர்களாவர்.

**05. ஆட்சேர்ப்பு முறை :**

1. விண்ணப்பதாரரை நேர்முகப் பரீட்சைக்கு உள்ளாக்கி தகைமை பரிசோதித்ததன் பின்னர் உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இணைப்பு இலக்கம் 01 ன் படி கீழ் குறிப்பிட்டவாறு உச்ச புள்ளிகளின் படி ஆட்சேர்க்கப்படுவர்.

| | மதிப்பெண்கள் வழங்கப்படும் முக்கிய துறை | உச்ச மதிப்பெண் | தேர்ந்தெடுப்பதற்கு கவனத்தில் கொள்ளும் குறைந்தபட்சப் புள்ளிகள் கணக்கீடு |
|---|---|---|---|
| 01 | கல்வித் தகைமை | 30 | |
| 02 | மேலதிக தகைமை (உப அட்டவணையில் 02 உடன் தொடர்புடைய) | 10 | |
| 03 | அனுபவம் (உப அட்டவணையில் 02 உடன் தொடர்புடைய) | 10 | 50% |
| 04 | சபை எதிகார எல்லைக்குள் வதியும் (ஒரு ஆண்டுக்கு 05 மதிப்பெண் படி) | 45 | |
| 05 | நேர் முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 | |
| | மொத்தம் | 100 | |

*குறிப்பு :*

1. அடிப்படைத் தகுதியை பரீட்சித்தல் நேர்முகப் பரீட்சையின் போது நடைபெறும்
2. அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதார்களில் நேர் முகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட மதிப்பெண் திறமை அடிப்படையில் மற்றும் ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்கள் தொகைப்படி பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவர்.

**06. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமை உள்ளடக்கிய வாறு 12" x 8" (A4) அளவுடைய கடதாசியில் தயாரித்து விண்ணப்பப்பத்திரத்தை 2018. 08. 20 ஆந் திகதி அல்லது அத் திகதிக்கு முன் தலைவர், அக்மீமன பிரதேச சபை, அக்மீமன என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுரைகளுக்கு முரன்பாடான அல்லது முழுமையற்ற விண்ணப்பப்பத்திரங்கள் ஏதேனும் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

**07. விண்ணப்பப்பத்திர படிவத்தோடு பின்வரும் சான்றிதல்களின் நிழற்படப் பிரதியை இணைக்க வேண்டும் :**

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ;
2. பரீட்சை சான்றிதழ்/பாடசாலை விலகல் சான்றிதழ் ;
3. பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (உரிய பிரதேச செயலாளர் கையொப்ப மிடப்பட்ட 06 மாதத்திற்குள் பெற்றுக் கொண்ட கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ்) ;

4. சமீபத்தில் பெற்றுக் கொண்ட நன்நடத்தை சான்றிதழ்கள் இரண்டு ;
5. தொழில் மற்றும் சேவை அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருந்தால் மாத்திரம்);
6. சேவை அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்;

**08**. விண்ணப்பப்பத்திரம் கோரப்பட்டதன் பின் அல்லது கால எல்லைக்கிடையில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு தாமதிப்பதற்கு அல்லது இந்த அறிவிப்பை இரத்துச் செய்வதற்கு அல்லது திருத்துவதற்கு அக்மீமன பிரதேச சபையின் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

இந்த அறிவிப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய உரைகளில் மொழி பெயர்ப்பில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையை முன்னுரிமையாகக் கொள்ளவும்.

சமரசேன கலஹெவத்தை,
தலைவர்,
அக்மீமன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்மீமன,
2018, யூன் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தென் மாகாண அரசாங்க சேவையில் அக்மீமன பிரதேச சபையில் கல்லறை உதவியாளர்/நூலக உதவியாளர் பதவி**

1. (அ) முதலெழுத்துக்களுடன் முழுப்பெயர் : ...........................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ...........................................................................

2. நிரந்தர வசிக்கும் மாவட்டம் : ...........................................................................

3. பிரதேச செயலாளர் தொகுதி : ...........................................................................

4. நிரந்தர வசிக்கும் விலாசம் : ...........................................................................

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ...........................................................................

6. பால் : ஆணா/பெண்ணா : ...........................................................................

7. பிறந்த திகதி : ஆண்டு ........................... மாதம் :- ..............................திகதி :- ...................................

8. விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு இறுதித் திகதிக்கு வயது :-

வருடங்கள் .......................... மாதங்கள் : .............................. நாட்கள் : ...................................

9. நீர் இலங்கை பிரசையா ? (பரம்பரையாகவா அல்லது பதிவு மூலமா என்று குறிப்பிடுக)

10. கல்வித் தகமை : - சித்தியடைந்த பரீட்சை விபரம் (சான்றிதழ்களின் பிரதியை இணையுங்கள்)

...........................................................................................................................

...........................................................................................................................

*11. தொழில் மற்றும் வேறு தகைமை விபரம் : (சான்றிதழ்களின் பிரதியை இணையுங்கள்)*

............................................................................................................................................

*12. விண்ணப்பதாரர் தற்போது சேவையில் உள்ளவராயின் :*

*(அ) தற்போது வகிக்கும் பதவி :- ..............................*

*(ஆ) சேவை செய்யும் அலுவலகம் :- ..............................*

*(இ) பதவி கிடைத்த திகதி :- ..............................*

*13. நீர் ஏதாவது குற்றத்திற்காக நீதி மனறத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா?*

............................................................................................................................................

*14. இந்த விண்ணப்பபடிவத்தில் நான் கொடுத்துள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றவையும் என்பதை நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் பிழையானவை அல்லது உண்மையற்றவை என நான் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு முன் வெளிப்படுத்தப்பட்டால் நான் தகைமையற்றவன் ஆவேன் எனவும் பதவி கிடைத்த பிறகு அவ்வாறான விடயமொன்று தெரிய வந்தால் எதுவித இழப்பீடும் செலுத்தாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.*

.................................
*விண்ணப்பதாரியின் கையொப்பம்*

*திகதி .................................*

*15. தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :*

*இந்த விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி ................................. தற்போது இத்திணைக்களத்தில் / நிறுவனத்தில் ................................. பணிபுரிகின்றார். அவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்றுத் தண்டணைக்கு (அறிவுறுத்தலைத் தவிர) உட்பட வில்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப் படிவத்தை விதப்புரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.*

.................................
*நிறுவனத் தலைவரின் கையொப்பம்*

*திகதி .................................*

*7 - 497*

## மத்திய மாகாண அரச சேவையின் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

கங்க இஹல கோரளே பிரதேச சபையில் நிலவும் சுகாதாரத் தொழிலாளர் தரம் III மற்றும் காவற்காரர் தரம் III பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.06.29 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது. குறித்த விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் திகதி 2018.06.30 எனக் குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், அது 2018.08.04 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

யூ. ஜீ. ஜயரத்ன,
செயலாளர்,
கங்க இஹல கோறளே பிரதேச சபை,
குருந்துவத்த பஸார்

2018, யூலை 04.

7 - 634

---

## ஹக்மன பிரதேச சபை

ஹக்மன பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகள் தொடர்பாக தகுதி வாய்ந்த ஹக்மன பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் நிரந்தர வதிவாளராகிய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவியின் பெயர் | வெற்றிடம் | ஆட்சேர்ப்புக்கான ஆகக் குறைந்த தகைமை மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|
| தகன அறை உதவியாளர் சாதாரண | 01 | க. பொ. த (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் விசேட சித்தி இரண்டுடன் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

சம்பள அளவுத் திட்டம் : PL1 - 03/ 2016

சம்பள அளவு முறை : ரூபா 24,250- 10 X 250- 10 X 270- 10X 300- 12X 330- ரூபா 36,410 மேற்குறித்த சம்பள அளவுத் திட்டம் 2020.01.01 ஆந் திகதிக்கு பூர்த்தியாக்கப்படும்.

02. வயதெல்லை : 01. விண்ணப்பங்கள் கோரப்பட்ட இறுதித் திகதிக்கு 18 வருடங்களுக்கு குறையாததும் 45 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.

**03. ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள் :**

3.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பங்கள் கோரப்பட்ட திகதியிலிருந்து கிட்டத்தட்ட 03 வருட காலங்களாக ஹக்மன பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

3.3 விண்ணப்பதாரி நன்னடத்தை உடையவராகவும் நல்ல மனோ நிலையையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

3.4 அரச நிதிக் கொள்கைகளின் கீழ் குற்றவாளியாக தண்டனைக்கு உட்பட்டவராக அல்லது அரச மாகாண சேவையில் தாழ்த்தப்பட்டவராக இருத்தல் கூடாது.

3.5 தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் சட்ட முறையிலான நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவதோடு, ஹக்மன பிரதேச சபையின் சேவை புரியும் அமைய/தற்காலிக/கொந்திராத் முறையில் சேவை புரிவோர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**04. சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :**

4.1 இப்பதவி நிரந்தரமானது.

4.2 உங்களுக்கான ஓய்வூதிய சம்பளத் திட்டம் தொடர்பாக அரசினால் எடுக்கப்படும்.

4.3 இப்பதவியானது 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதோடு, தகுதி காண் காலப்பகுதியில் வருகை மற்றும் வேலை சிறந்த முறையில் அமைவதாயின் மற்றும் முதலாம் செயற்திறன் பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் சேவை நிரந்தரம் தொடர்பாக அனைத்தும் பூர்த்தியாக்கப்படின், தகுதி காண் காலப்பகுதியின் இறுதியில் சேவை நிரந்தரப்படுத்தப்படும்.

4.4 ஆட்சேர்ப்பின் நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச கொள்கைகளுக்கும் நிருவாகக் கோவையின் சுற்று நிருபங்களுக்கும் நிதிக் கட்டளைகளுக்கும், மாகாண அரச சேவை ஆணைக்குழுவால் அடிக்கடி விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் தென் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஹக்மன பிரதேச சபையினால் அடிக்கடி வழங்கப்படும் விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் அனுசரித்து செயற்பட இணைந்திருத்தல் வேண்டும்.

**05. ஆட்சேர்ப்பு முறை :**

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் சட்டமுறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்.

**06. விண்ணப்பிக்கப்பட வேண்டிய முறை**

6.1 இவ்வறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க A4 அளவிலான கடதாசியில் தயார் செய்து விண்ணப்பப்படிவத்தினை 2018.08.13 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், ஹக்மன பிரதேச சபை, ஹக்மன என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் ;

6.2 விண்ணப்பங்கள் போடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை மிகவும் தெளிவாக குறித்தல் வேண்டும்.

6.3 தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை நிருவாகத் தலைவரின் உறுதியுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

6.4 பூர்த்தியாக்கப்படாத, தெளிவற்ற, உரிய தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி இரத்துச் செய்யப்படும்.

6.5 விண்ணப்பப்பத்திரங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(i) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ;

(ii) கல்விச் சான்றிதழ்கள் ;

(iii) வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் பிரதேச செயலாளரின் உறுதியுடன் ;

(iv) அடையாள அட்டையின் பிரதி ;

(v) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் 02 ;

(vi) 03 வருடத்திற்கு மேற்பட்ட தொழில் மற்றும் பயிற்சி தொடர்பான ஆவணங்கள்.

*07. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பை தாமதப்பபடுத்தல் அல்லது அறிவித்தலை இரத்துச் செய்தல் அனைத்து தகுதிகளும் ஹக்மன பிரதேச சபையின் செயலாளரின் அதிகாரத்தின்படியே.*

வீ. பீ. கே. அநுராத பேமரத்ன,
தலைவர்,
ஹக்மன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹக்மன,
2018.07.02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹக்மன பிரதேச சபை**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ..........................................................................

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ..........................................................................

3. நிரந்தர முகவரி : ..........................................................................

4. பிறந்த திகதி : ஆண்டு : .......................... மாதம் : ............................. திகதி :- ...................................

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

6. பால் : ஆண்/பெண் : ..........................................................................

7. திருமணமானவரா? திருமணமாகாதவரா ? : ...................................

8. இலங்கை பிரசையா ? அவ்வாறாயின் பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா? .........................................

9. கல்வித் தகைமைகள் : ..........................................................................

10. பயிற்சியும் சேவைத் திறமையும் : ..........................................................................

11. வேறு தகைமைகள் : ..........................................................................

12. நீர் ஏதாவது தவறிழைத்து நீதி மன்றம் மூலம் தண்டனைக்குட்பட்டுள்ளீரா ? ..............................................

13. தாங்கள் தற்போது இந்தப் பிரதேச சபையில் சேவை புரிவதாயின் அது தொடர்பான விபரங்கள் ....................
..........................................................................................................................

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும் அதில் எதுவும் பிழை இல்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிட்ட தகவல்கள் பிழையானது அல்லது பொய்யானது என சேவைக்கு அமர்த்த முன் அல்லது சேவைக்கு அமர்த்தியதன் பின் தெரியவந்தால் நான் தகுதியற்றவர் எனக் கருதி வேலையிலிருந்து நீக்கப்படுவதோடும், எந்த வித தண்டப்பணமும் செலுத்தாது எனது நியமனம் இரத்துச் செய்யப்படும் என்றும் நான் அறிந்து கையொப்பமிடுகின்றேன்.

................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி ................................

தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி ............................................ இந் நிறுவனத்தில் ............................................ பணிபுரிகின்றார். என்றும் மேற்குறித்த தகவல்கள் உண்மையெனவும் சான்றுப் படுத்துகின்றேன்.

................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை)

திகதி ................................

7 - 718

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மாவனல்லை பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் உறுப்புரையின் கீழ் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வீதிகள் பெயரிடுதல் மற்றும் நினைவுச் சின்னங்கள் அமைத்தல் பரிபாலித்தல் சட்டத்தின் 57 (அ) உறுப்புரையின் படி வீதி பெயரிடுதல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் உறுப்புரையின் கீழ் 1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வீதிகள் பெயரிடுதல் மற்றும் நினைவுச் சின்னங்கள் அமைத்தல் பரிபாலித்தல் சட்டத்தின் 57 (அ) உறுப்புரையின் படி சபரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை பிரதேச சபை பிரதேசத்தில் கொழும்பு - கண்டி வீதி மற்றும் நுங்கமுவ இறப்பர் தொழிற் சாலைக்கு அண்மித்த தியான நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பாதையை ஜய மாவத்தை என்ற பெயரில் பெயரிடுவதற்காக சபரகமுவ மாகாண சபையின் கௌரவ ஆளுனர் அவர்களினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

சந்தன குமார ஜயவந்தல,
தவிசாளர்,
மாவனல்லை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாவனல்லை,
2018, யூன் 14.

7 - 632

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.